# கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் - மாபெரும் ஜல்லிக்கட்டு விழா!








மதுரை வடக்கு மாவட்டம் மேற்கு தொகுதி தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு அலங்காநல்லூர் அருகே கீழக்கரையில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் நடைபெற்ற மாபெரும் ஜல்லிக்கட்டு விழாவினை உறுதிமொழி ஏற்புக்கு பின் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி மூர்த்தி கொடியசைத்து துவக்கி வைத்தார். சுமார் 1300 காளைகள் உள்பட 500 மாடு பிடி வீரர்கள் இதில் பங்கேற்றார்கள். காளைகளுக்கும், மாடுபிடி வீரர்களுக்கும் தங்க காசு, சைக்கிள், டிவி உள்ளிட்ட விலை உயர்ந்த பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, வெங்கடேசன் எம்.எல்.ஏ., ஆர்.டி.ஓ. ஷாலினி, நடிகர் விமல், தனச்செல்வம், ஜி.பி.ராஜா, திலீப் ராஜ கண்ணப்பன் , எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன் மூவேந்திரன், ஆசை கண்ணன், வக்கீல் பாலாஜி, சிறைச்செல்வன், பொதும்பு தனசேகர், ஆர்.கே.ஜெயராமன், தன்ராஜ் அன்பழகன், காவேரி, எஸ்.வி.சுதன், மதி வெங்கடேஷ், தவமணி, சசிகுமார், யூனியன் சேர்மன் வீரராகவன், மற்றும் பலர் குடும்பத்துடன் பங்கேற்றனர்.





அண்ணாநகர், டி.ஜி.வைஷ்ணவா கல்லூரியில், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, எம்.கே.மோகன் சாரிடபிள் டிரஸ்ட் சார்பில், பெண்களுக்கான தற்காப்பு கலை பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் கார்த்திக் மோகன், எம்.கே.மோகன் சாரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனர் சுருதி கார்த்திக்,டி.ஜி.வைஷ்ணவ கல்லூரி செயலாளர் அசோக் குமார் முந்த்ரா, கல்லூரியின் பொருளாளர் அசோக் கேடியா, கல்லூரி முதல்வர் எஸ். சந்தோஷ் பாபு மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் திரளாகப் பங்குபெற்றனர்.



கழகத் தலைவர் முதலமைச்சர் முக.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மாநில ஆதிதிராவிடர் நல குழு மற்றும் திருவள்ளூர் மத்திய மாவட்ட ஆதிதிராவிட நலக் குழு சார்பில் பூவிருந்தவல்லியில் மாநில ஆதிதிராவிட நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ தலைமையில் நகரச் செயலாளர் திருமலை வரவேற்பில் மாவட்ட அமைப்பாளர் ஏ. விமல் ஆனந்த் முன்னிலையில் ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அமைச்சர்கள் ஆவடி சா.மு.நாசர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி நல உதவிகள் வழங்கினர்.



காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியம் கீழ் பேரமநல்லூர் ஊராட்சியில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி நல உதவிகள் வழங்கள், கைப்பந்து விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பொதுக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார் உடன் தலைமைக் கழகப் பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, ஒன்றியச் செயலாளர் குமணன், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் இ.அசோகன், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.